# மொழி முதலெழுத்துக் கோட்பாடு - தொல்காப்பியம் முதல் தற்காலம் வரை

**முனைவர் கி.சங்கர நாராயணன்**
உதவிப் பேராசிரியர்
தமிழ் மேம்பாட்டுச் சங்கப்பலகைத் துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை

**மலர்:** 3
**இதழ்:** 3
**தொகுதி:** II
**மாதம்:** ஜனவரி
**வருடம்:** 2019
**ISSN:** 2454-3993

தொல்காப்பியம், வீரசோழியம், நேமிநாதம், நன்னூல், இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம், முத்துவீரியம், சுவாமிநாதம், அறுவகை இலக்கணம், தமிழ்நூல், தென்னூல், தமிழ்க்காப்பு இயம் போன்ற இலக்கண நூற்கள் சுட்டும் மொழி முதலெழுத்துக் கோட்பாடுகளை அறிமுகம்செய்து இக்காலத் தமிழில் இக்கோட்பாடுகளை அடைந்துள்ள மாற்றங்களையும் வளர்ச்சிகளையும் எடுத்துரைப்பதாக இக்கட்டுரை அமைகின்றது.

## இலக்கணிகள் பார்வையில்

தொல்காப்பியம் உயிர் எழுத்து பன்னிரெண்டும் (தொல்.59), மெய்யில் க, த, ந, ப, ம என்னும் ஐந்தும் உயிர் பன்னிரெண்டுடன் (தொல்.61) கூடி மொழிக்கு முதலாகும் என்கிறது (சான்று: க - கலை, காளி, கிளி, கீரி, குடி, கூடு, கெண்டை, கேழல், கைதல், கொண்டல், கோடை, கௌவை, த - தந்தை, தாடி, திற்றி, தீமை, துணி, தூணி, தெற்றி, தேவர், தையல், தொண்டை, தோடு, தௌவை, ந - நடம், நாரை, நிலம், நீர், நுழை, நூல், நெய்தல், நேயம், நைகை, நொய்யன, நோக்கம், நௌவி, ப - படை, பாடி, பிடி, பீடம், புகழ், பூழி, பெடை, பேடி, பைதல், பொன், போதகம், பௌவம், ம - மடம், மாலை, மிடறு, மீனம், முகம், மூதூர், மெலிந்தது, மேனி, மையல், மொழி, மோதகம், மௌவல்).

சகரம் (தொல்.62) அ, ஐ, ஔ என்னும் மூன்று உயிர் தவிர்த்த பிற ஒன்பது உயிருடன் இணைந்து மொழிக்கு முதலாகும் எனவும் (சான்று: சாலை, சிலை, சீறுக, சுரும்பு, சூழ்க, செய்கை, சேவடி, சொறிக, சோறு), வகரம் உ, ஊ, ஒ, ஓ என்னும் நான்குயிர் தவிர்த்த பிறவற்றுடன் இணைந்து மொழிக்கு முதலாகும் (தொல்.63) எனவும் (சான்று: வளை, வாளி, விளரி, வீடு, வெள்ளி, வேர், வையம், வௌவு), ஞகரம் ஆ, எ, ஒ என்னும் மூன்றுடன் இணைந்து (தொல்.64) முதலாகும் எனவும் (சான்று: ஞாலம், ஞெகிழி, ஞொள்கல்), யகரம் ஆவுடன் மட்டும் மொழிக்கு முதலாகும் எனவும் (சான்று: யான்), மொழிமுதற் குற்றியலுகரம் (தொல்.67) ஆகியனவெல்லாம் மொழிக்கு முதலாகும் எனவும் தெளிவுறுத்துகிறது.

மேலும், சகரம் மொழிக்கு முதலாவது குறித்து அறிஞர்களிடையே கருத்துவேறுபாடு நிகழ்கின்றது.

> **“சகரக் கிளவியும் அவற்றோ ரற்றே**
> **அ ஐ ஔவெனும் மூன்றலங் கடையே” (தொல்.எழுத்து.62)**

சகரம் அ, ஐ, ஔ என்னும் உயிர்கள் தவிர்த்த மற்ற உயிருடன் இணைந்து மொழிக்கு முதலாகும் என்கிறது தொல்காப்பியம். ஆனால்,

**"சகரக் கிளவியும் அவற்றோ ரற்றே**
**ஐ ஔ என்னும் இரண்டலங்கடையே"**

என்று தான் நூற்பா இருந்திருக்க வேண்டும் என்கிறார் மீ.காசுமான் (1994:61). சகரம் சறுக்கு, சப்பு போன்ற வினைச்சொற்களில் வருவதால் சகரக்கிளவி தமிழில் அகரத்தோடு கூடி வழங்கி வந்திருக்கவேண்டும் என்கிறார். மேலும்,

**"சகரக் கிளவியும் அவற்றோ ரற்றே**
**அவை ஔ வென்னும் ஒன்றலங்கடையே"**

என்று தான் இருக்கவேண்டும் என்கிறார் தேவநேயப் பாவாணர் (1994:61). இதனை மறுத்து வெள்ளைவாரணர் அவை என்னும் பன்மைக்கு ஒன்றலங்கடையே என்னும் ஒருமை முடிவு வருவது முற்றிலும் பொருந்தாது என்கிறார். மேலும், வ.உ.சி.யின் தொல்காப்பியம் எழுத்ததிகாரம் இளம்பூரணத்தில்

**"சகரக் கிளவியும் மவற்றோ ரற்றே**
**அ ஐ ஔவெனு மூன்றலங் கடையே"**

என்றுள்ளது. இந்நூலினைப் பதிப்பித்த பேரா.சு.அழகேசன் (2011:64), இந்நூல் மூலத்தில் 'ஓர் அன்ன', 'ஓர் அற்று' என்று வரும் இடங்களில் 'ஓர்' என்பதனை அசையென்று கொள்ளுதல் பொருத்தமுடையதாகத் தோன்றுகின்றது என்பர். எனவே, சகரம் குறித்துத் தொல்காப்பிய நுற்பாவில் உரையாசிரியர்களிடையே கருத்து முரண்பாடுகள் தொடர்ந்து நிலவி வந்துள்ளதை நாம் அறியலாம். தொல்காப்பியர் காலத்தில் சகரம் அகரத்துடனும், ஐகாரத்துடன் இணைந்து மொழிக்கு முதலாகுமா? முதலாகாதா? என்பது மேலும் விவாதத்திற்குரியதாகிறது. வீரசோழியம் உயிர் பன்னிரெண்டும், மெய்யில் க, ச, த, ந, ப, ம, வ, ய, ஞ ஆகியனவும் இணைந்து மொழிக்கு முதலாகும் என்பதைப் பின்வரும் நூற்பா சுட்டுகின்றது.

**"ஆவியனைத்துங் கசதநபமவ் வரியும்வவ்வி**
**லேவியவெட்டும்யவ் வாறுஞுந்நான்குமெல் லாவுலகு**
**மேவியவெண்குடைச் செம்பியன்வீரரா சேந்திரன்றன்**
**நாவியல்செந்தமிட் சொல்லின்மொழிமுத னன்னுதலே" (வீர.7)**

நேமிநாதம் உயிர் பன்னிரெண்டும், மெய்யில் க, ச, த, ந, ப, ம, வ, ஞ, ய ஆகியனவும் இணைந்து மொழிக்கு முதலாகும் (நேமி.7) என்கிறது. நன்னூல் உயிர் பன்னிரெண்டும், மெய்யில் க, ச, த, ந, ப, ம, வ, ய, ஞ ஆகிய எழுத்துக்களுடன் புதியதாக 'ங' என்பதைக் கூட்டி இருபத்திரெண்டு எழுத்தினை மொழிக்கு முதலாகும் எழுத்துக்கள் (நேமி.102) என்கிறது.

**"பன்னீருயிரும் க ச த ந ப ம வ ய**
**ஞ ங ஈரைந்து உயிர் மெய்யும் மொழிமுதல்" (நன்.102)**

சகரம் பன்னிரெண்டு உயிருடன் இணைந்து மொழிக்கு முதலாகும் என்கிறது. வகரம் உ, ஊ, ஒ, ஓ என்ற நான்குயிருடன் தவிர்த்த பிறமெய்யுடன் இணைந்து மொழிக்கு முதலாகும் (நன்.103), யகரம் அ, ஆ, உ, ஊ, ஓ, ஔ என்பவற்றுடன் இணைந்து மொழிக்கு முதலாகும் (நன்.104), ஞகரம் அ, ஆ, எ, ஒவ்வுடன் இணைந்து மொழிக்கு முதலாகும் (நன்.105), ஙகரமெய் மூன்று சுட்டும் யாவினாவும் எகர வினாவும் ஆகிய இடைச்சொற்களின் பின்னே அகரத்தைச் சேர்ந்து மொழிக்கு முதலாகும் (நன்.106) என்கிறது.

தொல்காப்பியர் சகரம் குறித்து இலக்கணம் அமைக்க, இரண்டாயிரம் ஆண்டுக்குப் பின்வந்த பவணந்தியார் சகரம் எல்லா உயிருடனும் மொழிமுதலில் வரும் எனக் கொண்டு, அவ்விதியை மாற்றத் தொடங்கினார். காரணம் என்னவெனில், தொல்காப்பியனார் காலத்தில் வழங்காத சங்கு, சங்கம், சகடம் முதலான வடசொற்கள் நன்னூலார் காலத்தில் பயின்று வந்தமையே ஆகும்.

இலக்கண விளக்கம், உயிர் பன்னிரெண்டும், மெய்யில் க, த, ந, ப, ம ஆகிய ஐந்து மெய்கள் பன்னிரெண்டு உயிருடனும் (இல.வி.26) இணைந்து மொழிக்கு முதலாகும் என்கிறது. சகரம் ஐ, ஔ

தவிர்த்த பிற பத்து மெய்யுடனும் (சான்று: சட்டி, சாந்து, சினம், சீற்றம், சுரும்பு, சூரல், செக்கு, சேவல், சொல், சோறு), உகர, ஊகார, ஒகர, ஓகாரங்கள் ஒழிந்து நின்ற எட்டு உயிருடன் கூடி வகரமும் (சான்று: வளை, வாளி, வினை, வீடு, வெள்ளி, வேர், வையம், வௌவி), ஆகார, எகர, ஒகரங்களோடு கூடி ஞகரமும் (சான்று: ஞாலம், ஞெண்டு, ஞொள்கி), ஆகாரத்தோடு கூடி யகரமும் மொழிக்கு முதலாகும் (சான்று: யானை) என்பதைப் பின்வரும் நூற்பா தெளிவுறுத்துகிறது.

**"ஐஔ வலவொடு வகாரமும், ஆஎ**
**ஒவ்வொடு ஞகாரமு, மாவொடு யகாரமு**
**முதலு மென்மனார் முறையுணர்ந் தோரே" (இல.வி.27)**

தொன்னூல் விளக்கம் உயிர் பன்னிரெண்டும், மெய்யில் க, ச, த, ப, ஞ, ந, ம, வ, ய என்ற ஒன்பதினை மொழிக்கு முதலாகும் எழுத்துக்கள் என்கிறது.

**"உயிர் கசதப ஞநமவய முதற்கே**
**எ ஒ ஔவும் மெல்லின ஙவ்வும்**
**நீத்து உயிர் ணமன இடையினம் ஈறே" (தொ.வி.10)**

இவ்வொன்பது மெய்யெழுத்துக்கள் பன்னிரெண்டு உயிரில் எதனுடன் இணைந்து மொழிக்கு முதலாகும் என்பதைச் சுட்டவில்லை.

உயிர் பன்னிரெண்டும் (மு.வீ.60), மெய்யில் க, ச, த, ந, ப, ம என்ற ஆறும் பன்னிரெண்டு உயிருடன் இணைந்து மொழிக்கு முதலாகும் என்கிறது முத்துவீரியம். அ, ஆ, எ, ஓ இவையெல்லாம் ஞகரத்துடன் இணைந்து மொழிக்கு முதலாகும் (மு.வீ.62) எனவும் (சான்று: ஞமலி, ஞாயிறு, ஞெகிழி, ஞொள்கிற்று), யகரம் அ, ஆ, உ, ஊ, ஓ, ஔ என்பவற்றுடன் இணைந்து மொழிக்கு முதலாகும் (மு.வீ.63) எனவும் (சான்று: யவனர், யாகம், யுகம், யூகம், யோகம், யௌவனம்), வகரம் உ, ஊ, ஒ, ஓ தவிர்த்த பிறமெய்யுடன் இணைந்து மொழிக்கு முதலாகும் (மு.வீ.64) என்கிறது (சான்று: வசை, வாகை, வினை, வீமன், வெளி, வேதம், வையகம், வௌவால்) முத்துவீரியம்.

உயிர் பன்னிரெண்டும், மெய்யில் க, ச, த, ப, ஞ, ந, ம, வ, ய, ங என்பனவும் மொழிக்கு முதலாகும் எழுத்துக்கள் (சு.நா.21) என்கிறது சுவாமிநாதம். அறுவகை இலக்கணம் மொழிக்கு முதலாகாத எழுத்துக்களைச் சுட்டி, மொழிக்கு முதலாகும் எழுத்துக்களை விளக்கிச் செல்கின்றது. உயிர் பன்னிரெண்டும், மெய்யில் க, ச, த, ப, ஞ, ந, ம, வ, ய என்பனவும் இணைந்து மொழிக்கு முதலாகும் என்பதைப் பின்வரும் நூற்பா சுட்டுகின்றது.

**"ஆய்தமும் ஒற்றும் ஙகரமும் டகரமும்**
**ணகரமும் ரகரமும் லகரமும் ழகரமும்**
**ளகரமும் றகரமும் னகரமும் மொழிமுன்**
**நில்லா என்று நிகழ்த்திடல் மரபே" (அறு.112)**

தமிழ்நூல் உயிர் பன்னிரெண்டும், மெய்யில் க, ச, த, ப, ஞ, ந, ம, வ, ய என்பனவும் மொழிக்கு முதலாகும் என்கிறது. யகரம் ஆகாரத்துடனும், யகரம் ஞகரத்துடனும், சகரம் ஐ, ஔ தவிர்த்த பிற மெய்யுடனும், வகரம் உ, ஊ, ஒ, ஓ தவிர்த்த பிற மெய்யுடன் இணைந்தும் மொழிக்கு முதலாகும் என்கிறது (தமிழ்.25) தமிழ்நூல்.

தென்னூல் உயிர் பன்னிரெண்டும், மெய்யில் க, ச, த, ப, ஞ, ந, ம, வ, ய என்பனவும் மொழிக்கு முதலாகும் என்கிறது (தென்.61). க, த, ந, ப, ம என்ற ஐந்து மெய்யும் எல்லா உயிருடன் இணைந்து மொழிக்கு முதலாகும் (தென்.61) எனவும், சகரம் ஐகார, ஔகாரம் தவிர்த்த பிற உயிருடன் கூடி முதலாகும் (தென்.62) எனவும், ஞகரம் அ, ஆ, இ, எ, ஒகரத்துடனும் (தென்.64), யகரம் அ, ஆவுடனும் (தென்.65), வகரம் உ, ஊ, ஒ, ஓகரத்துடனும் (தென்.66) இணைந்து மொழிக்கு முதலாகும் என்கிறது. மொழிமுதல் குற்றியலுகரத்தையும் மொழிக்கு முதலாகும் எழுத்தாகக் கொள்கிறது (தென்.67) தென்னூல்.

தமிழ்க் காப்பு இயம் உயிர் பன்னிரெண்டும் (த.கா.இ.60), மெய்யில் க, ச, த, ப, ஞ, ந, ம, வ, ய, ங என்பனவும் இணைந்து முதலாகும் என்கிறது. மேலும் க, த, ந, ப, ம என்னும் எல்லா மெய்களும் எல்லா உயிருடன் இணைந்தும் மொழிக்கு முதலாகும் (த.கா.இ.63) என்கிறது.

சகரம் ஐ, ஔ தவிர்த்த பிற மெய்களுடனும் (த.கா.இ.64), வகரம் அ, ஆ, இ, ஈ, எ, ஏ, ஐ, ஔ என்னும் உயிருடனும் (த.கா.இ.65), ஞகரம் அ, ஆ, எ, ஓ என்னும் நான்குயிருடனும் (த.கா.இ.66), யகரம் அகர, ஆகாரத்துடனும் (த.கா.இ.67), ஙகரமெய் மூன்று சுட்டும், யாவினாவும், எகர வினாவும் ஆகிய இடைச்சொற்களின் பின்னே அகரத்தைச் சேர்ந்தும் மொழிக்கு முதலாகும் (த.கா.இ.68) என்கிறது.

**மொழியியலாளர், திறனாய்வாளர்கள் பார்வையில்**

தொல்காப்பியம் குறிப்பிடும் அழன் என்னும் சொல் திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டப் பேச்சு வழக்கில் சழன் என வழங்கப்படுகின்றது. எனவே சகரம் அகரத்தோடு மொழி முதலில் வருதல் தொல்காப்பியக் கால மொழியில் பெரும்பான்மை வழக்கில் மறைவுற்ற போதிலும் வட்டார வழக்குகளில் இடம் பெற்றிருந்தது என்கிறார் பெ.சுயம்பு (1985:42). உயிர்மெய் எழுத்துக்களும் மொழிக்கு முதலாகும் என்பதை

**“உயிர்மெய் யல்லன மொழிமுத லாகா” (தொல்.60)**

எனும் சூத்திரம் உணர்த்துகின்றது. மேலும், இச்சூத்திரம் உயிர்மெய் எழுத்துக்கள் தவிர்த்த ஏனைய எழுத்துக்கள் அதாவது தனிமெய்கள் மொழிக்கு முதலாக வராது என்ற விதியை வரையறை செய்கின்றது. மொழியிறுதி எழுத்துக்களில் தனிமெய்கள் அப்படியே வழங்கப்படுகின்றன. பெரும்பாலும் மொழியிடை எழுத்துக்களில் தனிமெய்கள் உயிருடனே இணைந்து உயிர்மெய்யெழுத்துக்களாக வழங்கப்படுகின்றன.

| | | | |
|---|---|---|---|
| **சான்று:** | க்அண் | - | கண் (மொழிமுதலில் தனிமெய்கள் இடம்பெறாது) |
| | அட்இ | - | அடி (மொழியிடையில் தனிமெய்கள் பெரும்பாலும் சேர்த்தே வழங்கப்படுகிறது) |
| | கண், பொன் | - | (மொழியிறுதியில் தனிமெய்கள் அப்படியே இடம்பெறுகின்றன) |

இவ்வாறு தனிமெய்வடிவங்கள் அப்படியே பயன்படுத்தாமல், உயிர்மெய் வடிவங்களாக எழுதப்பட்டதன் நோக்கம் கல்லிலும் ஓலையிலும் பிறவற்றிலும் எளிதிலே எழுத முடியாத அக்காலத்திலும், எழுதுஞ்சிரமத்தைக் குறைப்பதற்கு இது ஓர் உத்தியாக (ந்எட்உஞ்ச்எழ்இய்அன் - நெடுஞ்செழியன்) அமைந்திருக்கலாம். அவ்வுத்தி உயிர்மெய் எழுத்து உபயோகமாகும் என்கிறார் கலாநிதி அ. சண்முகதாஸ் (2008:94).

மேலும், ட, ண, ர, ல, ழ, ள, ற, ன ஆகிய எட்டு எழுத்துக்களை முதலில் கொண்ட சொற்கள் பழங்காலத்தில் இல்லை. இவ்வெட்டும் நா மேலண்ணத்தைத் தொடுதலானே பிறக்கும் நாவெழுத்துக்களாம். அங்ஙனம் மேலண்ணந் தொட்டு உச்சரித்தற் பொருட்டு வேண்டப்படும் முயற்சி மிகுதியாயிருத்தலின் அவ்வெட்டும் மெய்களும் மொழிக்கு முதலில் வராவாயின என்பர் வி. கோ.சூரியநாராயண சாஸ்திரி (1963:58).

மொழிமுதல் ஞகரமும் நகரமும் திரிந்து ன் ஆயின. இத்திரிபுகளால் மட்டுமல்லாது வேறொரு வகைத் திரிபாலும் னகரம் மொழி முதலாகிறது.

1. எனக்கு, உனக்கு என்பன பிராமணர் தமிழில் னேக்கு, னோக்கு எனத் திரிதலால் அது நேர்கிறது.
2. ரகரம் மொழி முதலாதல்: நிரம்பு - ரொம்பு
3. லகரம் மொழி முதலாதல்: உலாத்து - லாத்து
4. ஙகரம் மொழி முதலாதல்: ஙப்பா, ஙொப்பா, ஙக்கா, ஙொக்கா

அயல்மொழிச் சொற்களில் மட்டும் மொழி முதலாக வழங்குபவை: டமாரம், டாக்டர். ஏடா என்னும் விளிச்சொல் டே, டேய் என வழங்குகிறது. இதனைத் தமிழுக்குரியதாகக் கொள்ளலாம் என்பர் முருகரத்தினம் (1973:351).

பழமையும், புதுமையும் கலந்து இன்றைய தமிழல் 13 மெய்கள் (க், ச், ட், த், ப், ங், ஞ், ம், ன், ய், ர், ல், வ்) மொழி முதலில் வழங்குகின்றன. இதனோடு ந் என்பதையும் சேர்த்து பதினான்கு எழுத்துக்களையும் சுட்டுகிறார் ப. வேல்முருகன் (2006:89). மொழிக்கு முதலில் ட், ர், ல் மற்றும் ஆய்தம் போன்ற எழுத்துக்கள் வாராததாகக் கருதப்பட்டன. ஆயின், தற்காலத் தமிழில் பிறமொழிச் சொற்கள் வருதலைக் கீழக்கண்ட சொற்கள் மூலமாகப் பேரா. சு. அழகேசன் குறிப்பிடுகிறார். டவர், டல், டர்னா, டப்பா, டாக்டர், டெண்டர், டெலிபோன், லட்சம், லஞ்சம், லட்டு, லாரி, லாட்டரி, லீலை, லேட், லீவ், ரசிகர்கள், ரம்ஸான், ரப்பர், ரத்து, ரயில், ரயில்வே, ராஜினாமா, ரிசர்வ், ரேட் போல்வன. மேலும் ஆய்தம் இன்று யெர்களில் மொழி முதலில் வருதலையும் (ஃப்ளோரா, ஃபிளாரன்ஸ், ஃப்ரியா) காணலாம் என்கிறார் (2004:22). இவ்வாறு காலச்சூழலுக்கு ஏற்ப மொழி முதலெழுத்துக்களில் மாற்றங்கள் நிகழ்ந்த வண்ணமாய் உள்ளன.

**இக்காலத் தமிழில்**

டம்ளர், டியூப், டெலிபோன், டைப்பிங், டீ சர்ட், டிராபிக், ரிலீஸ், பிளாட், லீவு, ஜெராக்ஸ், ஜீப், ஸ்டாம்பு, ஃபைல் போன்ற சொற்கள் இக்காலத் தமிழில் அதிகமாகக் காணக்கிடக்கின்றன.

தமிழ்ச்சொற்களோடு ஆங்கிலம், வடமொழி, இந்தி, உருது, அரபு, பாரசீகம், போர்ச்சுகீசம், மலாய், பாலி போன்ற பலமொழிச் சொற்கள் கலந்துள்ளன. இத்தகைய் கலப்பினால்தான் தமிழ்ச் சொற்கள் எவையென்பதும், பிறமொழிச்சொற்கள் எவையென்பதும் தெரியாமல் நாளிதழ்கள், சிறுகதை, நாவல், கவிதை, மக்களின் பேச்சுவழக்கு போன்றவற்றில் சொற்கள் இரண்டறக் கலந்துள்ளன.

இலக்கணிகள் சுட்டிய மொழிமுதலெழுத்துகள் எல்லாம் தற்காலத்தமிழில் குறைவாகப் பின்பற்றப்பட்டும், சுட்டாத பிறவெழுத்துக்கள் எல்லாம் அதிகமாகவும் பயன்பாட்டில் உள்ளன என்பதை மேற்கண்ட தரவுகளின் வழிஅறியலாம். தொல்காப்பியரின் கூற்றுப்படித் தனிமெய்கள் மொழிக்கு முதலாக இடம் பெற்றால் அது பிறமொழிச்சொற்கள் என்பதை அடையாளம் காணலாம் என்கிறார். ஆனால் தற்காலத்தில் தனிமெய்கள் அல்லாத பிறசொற்கள் எல்லாம் தமிழ்ச்சொற்கள் போன்றே காணப்படுகின்றன.

இந்நிலைமாற தமிழில் கலந்துள்ள பிறமொழிச்சொற்கள் எவையென்பதைக் குறித்த சொற்தொகுதியை வெளியிடவேண்டும். பின்னர் பிறமொழிச்சொற்களை பயன்படுத்தும் தற்காலதமிழ்த் தொகுதிகள் அனைத்தும் பிறமொழிச்சொற்களின் அருகே அடைப்புக்குறிக்குள் தூயத்தமிழ்ச் சொற்களை எழுதவேண்டும். மக்களின் பழக்கத்திற்கு அச்சொற்கள் வந்தவுடன் அடைப்புக்குறிகளை நீக்கித் தூயசொற்களை நடைமுறைக்குக் கொண்டு வரவேண்டும். குறிப்பாகத் தகவல் தொடர்பு சாதனங்களான பத்திரிக்கை, தொலைக்காட்சிகள், பண்பலைகள் போன்றவைகளின் முயற்சியே இதற்கு மையமாகிறது. ஏனெனில் இன்றைய உலகம் என்பது தகவல்தொடர்பு சாதனங்களின் வசமாகியுள்ளது. இவற்றில் இச்சொற்கள் எல்லாம் நடைமுறைக்கு வருமேயானால் தொல்காப்பியம் முதலாக மற்ற இலக்கணநூற்கள் சுட்டிய தூயதமிழ்ச் சொற்கள் எல்லாம் மக்களிடம் பயன்பாட்டு நடைமுறைக்கு வரப்பெறும். அத்துடன் மொழித்தூய்மை அடையும் என்பதில் மாற்றமில்லை.

மேனாட்டார் வரவு, பண்பாடு, நாகரிகம், வாணிபம், பிறமொழித்தாக்கம் போன்றவை எல்லாம் தமிழில் பிறமொழிச்சொற்கள் தமிழில் வந்து கலப்பதற்குக் காரணிகளாக அமைந்தன. இதனால் மொழிக்கு முதலாகும் எழுத்துக்களில் மாற்றமும், பிறமொழிக்கலப்பும், பிறமொழிக்கலப்பால் தமிழ்ச்சொற்களை இனம்காண முடியாத நிலையும் உருவாகின. தற்காலத்தமிழில் மொழிமுதல் எழுத்துக்களின் வருகை முறைகள் தவிர்க்கவியலாத இலக்கணக் கூறாக அமைந்து விடுகின்றன. தற்காலத்தமிழல் புதிய போக்குகளும், மாற்றங்களும் காணப்படுகின்றன. காலமாற்றத்தால் ஏற்பட்ட மாற்றங்களும், வளர்ச்சிகளும் இதற்கு முக்கிய காரணிகளாக அமைகின்றன. தொல்காப்பியம் முதல்

தமிழ்க் காப்பு இயம் வரையிலான இலக்கணிகள் சுட்டிய மொழிமுதலெழுத்துக் கோட்பாடுகளில் சிற்சில மாற்றங்களும் வளர்ச்சிகளும் காணப்படுகின்றன. இக்காலத் தமிழில் மரபிலக்கணக் கோட்பாட்டினைப் பொருந்தி இனம் காண்பது எவ்விதம் பொருந்தும்? எனவே மரபிலக்கணங்களின் கோட்பாட்டினைப்போல இக்காலத் தமிழுக்கான இலக்கணக் கோட்பாடுகளை உருவாக்குவது காலத்தின் தேவையாகும். அதுதான் மொழியின் அடுத்தகட்ட நகர்வுக்குப் பெரிதும் துணைபுரியும்.

**பயன்பட்ட நூல்கள்**

1. மரபிலக்கண நூற்களும் உரைகளும்.
2. அழகேசன்.சு 2007, இலக்கணப் பார்வைகளும் பதிவுகளும், சேகா் பதிப்பகம், சென்னை.
3. காசுமான்.மி 1994, தமிழ்த்தாய் எழுத்திலக்கணம், காசுமான் பதிப்பகம், சென்னை.
4. சக்திவேல்.சு 2003, சொற்கள், மெய்யப்பன் பதிப்பகம், சென்னை.
5. சங்கா்.வே 2006, இயல் தமிழ் இலக்கணம், நன்மொழிப் பதிப்பகம், புதுச்சேரி.
6. சண்முகதாஸ்.அ 2008, தமிழ்மொழி இலக்கண இயல்புகள். நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.
7. சண்முகம்.செ 2001, இக்கால எழுத்துத் தமிழ், குமரன் பதிப்பகம், சென்னை.
8. பரமசிவம்.சொ 1996, புதிய தமிழ், பட்டுப்பதிப்பகம், சென்னை.
9. பொற்கோ 2006, இக்காலத் தமிழ் இலக்கணம், பூம்பொழில் வெளியீடு, சென்னை.